மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
Provincial Department of Education, Northern Province

# தரம் - 03 மாணவர்களுக்கான நிலையறி பரீட்சை -2021

**பாடம் :- கிறிஸ்தவம்** **நேரம் -1.30 மணித்தியாலம்**

**மாணவர் பெயர்:-** .............................. **பாடசாலை:-** ..........................................

01. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இறைவன் உலகை எத்தனை நாளில் படைத்தார்?
   1. 5    2. 6    3. 7

2. இரண்டாம் நாளில் இறைவன் எதைப்படைத்தார்?
   1. சூரியன், சந்திரன், விண்மீன்
   2. ஆறு,கடல்
   3. விலங்குகள்

3. இயேசுவின் வளர்ப்புத் தந்தையின் பெயர் யாது?
   1. இம்மானுவேல்    2. எரேமியா    3. யோசேப்பு

4. ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு வழங்கிய உணவு யாது?
   1. மன்னா    2. சோறு    3. கூழ்

5. எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் யார்?
   1. எகிப்தியர்
   2. பரிசேயர்
   3. இஸ்ராயேல் மக்கள்

6. இஸ்ராயேல் மக்கள் யாருக்கு எதிராக முறுமுறுத்தனர்?
   1. இறைவனுக்கு
   2. மோசேக்கு
   3. ஆண்டவருக்கும், மோசேக்கும்

7. ஆண்டவர் மாலையில் எதை உணவாகக் கொடுத்தார்?
   1. மன்னா    2. காடைகள்    3. இட்லி

8. ஏலியின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு சேவை செய்து வந்த சிறுவன் யார்?
   1. சாமுவேல்    2. யோசுவா    3. எலியா

9. ஆண்டவர் சாமுவேலை எத்தனை முறை அழைத்தார்?
   1. இரண்டு    2. நான்கு    3. மூன்று



kalvi.lk

10. சமாதானக் குமாரனாக ஏழ்மையில் பிறந்தவர் யார்?

1. இயேசு 2. யோவான் 3. மத்தேயு

11. இயேசு அன்று எருசலேமில் அரசனாக சென்ற பயணத்தை இன்று நாம் என்ன நாளாகக் கொண்டாடுகிறோம்?

1. குருத்தோலை ஞாயிறு 2. நத்தார் 3. பெரிய வெள்ளி

12. நாம் கடவுளுடன் தொடர்பு கொள்ளுவதற்கான சிறந்த வழி எது?

1. செபம் 2. நட்பு 3. மீட்பு

13. இயேசு தனிமையாக ……………….. செய்தார்?

1. இறைவேண்டுதல் 2. அன்பு 3. அதிகாரம்

14. குழந்தை இயேசுவை எங்கு கிடத்தினார்கள்?

1. தீவனத்தொட்டியில் 2. மெத்தையில் 3. பாயில்

15. நாம் உலகிற்கு எதைப் பரப்ப வேண்டும்?

1. நட்பை 2. சமாதானத்தை 3. உரிமையை

16. இயேசு பவனி சென்ற மிருகம் எது?

1. கழுதை 2. எருது 3. குதிரை

17. நாம் தினமும் …………

1. செபிக்க வேண்டும்

2. நித்திரை செய்ய வேண்டும்

3. பிறருடன் சண்டையிட வேண்டும்

18. 'ஆண்டவர் பெயரால் அரசராக வருபவர்….'

1. போற்றப்பெறுக 2. சாற்றப்பெறுக 3. சபிக்கப்படுக

19. வறுமையில் வாடுபவர்களுக்கு நாம் யாது செய்யலாம்?

1. உதவி செய்யலாம் 2. பாராது செல்லலாம் 3. கோபப்படலாம்

20. பெருவெள்ளம் எத்தனை நாட்கள் மண்ணுலகில் இருந்தது?

1. எழுபது நாட்கள் 2. நூறு நாட்கள் 3. நாற்பது நாட்கள்

(20x2 40 புள்ளிகள்)



kalvi.lk

**02. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. இறைவன் உலகத்தை படைத்தார். ( )
2. ஆறாம் நாள் மிருகங்களை படைத்தார். ( )
3. ஏலியிடம் போயீசன் வளர்ந்தார். ( )
4. நாம் பிறருடன் சமாதானத்துடன் வாழ வேண்டும். ( )
5. நான் எப்பொழுதும் தூய ஆவியானவருக்கு கீழ்ப்படிவேன். ( )

**(3x5=15 புள்ளிகள்)**

**03. சரியான விடையை தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.**

(பாலைநிலத்தில், சமாதானத்தை, இயேசு, இறைவனின், தூய ஆவியானவர்)

1. நான் ……………………….. பிள்ளையாவேன்.
2. எம்மை இன்று வழிநடத்துபவர் ………………………. ஆகும்.
3. நான் …………………………. பரப்பும் பிள்ளையாவேன்.
4. ………………………. அரசராக எருசலேமில் நுழைந்தார்.
5. இஸ்ராயேல் மக்கள் …………………… பயணம் செய்தனர். **(3x5= 15 புள்ளிகள்)**

**04. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?**

1. உலகத்தை படைத்தவர் யார்?

………………………………………………………………………………….

2. கனவில் தோன்றிய தூதன் இயேசுவையும், தாயையும் எங்கு கூட்டிச் செல்லுமாறு கூறினார்?

………………………………………………………………………………….

3. இறைவனின் அழைப்பிற்கு சாமுவேல் கூறிய பதில் யாது?

………………………………………………………………………………….

4. நாம் யாருக்காக செபிக்க வேண்டும்?

………………………………………………………………………………….

5. நோவா ஏன் கீழ்ப்படிந்தார்?


………………………………………………………………………………….

**(3x5= 15 புள்ளிகள்)**




kalvi.lk


05. பின்வரும் படங்களின் பெயரினை எழுதுக.




………………………………………………………………..





………………………………………………………………..



………………………………………………………………..



………………………………………………………………..



………………………………………………………………..

(3x5= 15 புள்ளிகள்)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page